No. of Printed Pages : **8 + Railway Reservation Form**

**3760**

பதிவு எண் | | | | | | | |

# தமிழ் இரண்டாம் தாள்

# Language – Part A – TAMIL – Paper II

536418

(இலக்கணம், துணைப்பாடம், கடிதம், கட்டுரை, மொழிப்பயிற்சி)

நேரம் : 2½ மணி ]

[ மொத்த மதிப்பெண்கள் : 100

**அறிவுரை :**

(1) அனைத்து வினாக்களும் சரியாக அச்சுப் பதிவாகி உள்ளதா என்பதனை சரிபார்த்துக் கொள்ளவும். அச்சுப்பதிவில் குறையிருப்பின் அறைக் கண்காணிப்பாளரிடம் உடனடியாக தெரிவிக்கவும்.

(2) நீலம் அல்லது கருப்பு மையினை மட்டுமே எழுதுவதற்குப் பயன்படுத்த வேண்டும்.

**குறிப்பு :**

(i) இவ்வினாத்தாள் நான்கு பிரிவுகளைக் கொண்டது.

(ii) விடைகள் தெளிவாகவும், குறித்த அளவினதாகவும் அமைதல் வேண்டும்.

(iii) வினா எண் **38**-க்கு தெற்கு ரயில்வே முன்பதிவு / ரத்து செய்யும் விண்ணப்ப படிவம் தனியாக வழங்கப்பட்டுள்ளது. அதை நிரப்பி முதன்மை விடைத்தாளுடன் இணைக்கவும்.

## பிரிவு - I

(மதிப்பெண்கள் : 20)

**அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்க.**

### பகுதி - 1

**உரிய விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.** **5x1=5**

**1.** வரும் வண்டி - இச்சொற்களில் வரும் குறுக்கம்?

(அ) ஔகாரக் குறுக்கம் (ஆ) மகரக் குறுக்கம் (இ) ஐகாரக் குறுக்கம்

**2.** கலா கலகலவெனச் சிரித்தாள் - இதில் ‘கல கல’ என்பது :

(அ) அடுக்குத் தொடர் (ஆ) இனங்குறித்தல் (இ) இரட்டைக் கிளவி

[ திருப்புக

3. வடக்கு என்னும் திசைப் பெயரோடு பிற திசைகள் வந்து சேரும்போது :
   (அ) நிலைமொழி ஈறு நீங்கும்
   (ஆ) நிலைமொழி ஈறும் மெய்யும் நீங்கும்
   (இ) வருமொழி முதல் கெடும்

4. அகப்பொருள் திணைகள் :
   (அ) ஏழு (ஆ) ஐந்து (இ) பன்னிரெண்டு

5. 'சிறப்பு' என்னும் சொல் வெண்பாவின் ஈற்றடியின் ஈற்றுச் சீராயின் அதன் வாய்பாடு __________ஆகும்.
   (அ) நாள் (ஆ) காசு (இ) பிறப்பு

## பகுதி - 2

**கோடிட்ட இடங்களை நிறைவு செய்க.** **5x1=5**

6. செய்பவன், கருவி, நிலம், செயல், காலம், செய்பொருள் ஆறும் வெளிப்படையாக உணர்த்துவது__________.

7. மண்ணாசை கருதிப் போருக்கு செல்வது __________ திணை.

8. தான் அறியாத ஒரு பொருளை அறிந்து கொள்வதற்காக கேட்கும் வினா__________.

9. 'முழவு உறழ் தடக்கை' - இதில் அமைந்துள்ள உவம உருபு __________.

10. புகழ்வது போலப் பழிப்பதும், பழிப்பது போலப் புகழ்வதும் __________ அணியாகும்.

## பகுதி - 3

**சுருக்கமாக விடையளிக்கவும் :** **10x1=10**

11. வல்லினம் மிகா இடங்களுள் ஒன்றைச் சான்று தந்து விளக்குக.

12. பிரி - இவ்வினைப் பகுதியைப் பெயரெச்சமாக்குக.

13. நேற்று மாலை புயல் வீசியதால் மரங்கள் சாய்ந்தன - இத்தொடர் எவ்வகை வாக்கியம் ?

14. கீழ்க்காணும் தொடரிலுள்ள ஒருமை, பன்மை பிழை நீக்கி எழுதுக. மனிதனின் நோக்கம் உயர்ந்ததாகவும், தூய்மையானதாகவும் இருந்தால் மட்டும் போதா.

15. கீழ்க்காணும் தொடரில் சந்திப் பிழையை நீக்கி எழுதுக.
மனித இனத்தின் மரபு செல்வமாக தமிழ்மொழி விளங்குகிறது.

16. கீழ்க்காணும் தொடரில் அமைந்துள்ள பிறமொழிச் சொற்களுக்குரிய தமிழ்ச் சொற்களை எழுதுக.
எல்லா ஸ்டூடன்சும் பஸ்ஸில் ஏறி ஸ்கூலுக்குச் சென்றார்கள்.

17. தொகைச் சொல்லை விரித்தெழுதுக.
மூவிடம்

18. கீழ்க்காணும் தொடரில் உள்ள வழூஉச் சொற்களை நீக்கி எழுதுக.
கதவைத் தாப்பாள் போட மறந்துட்டேன்.

19. உவமைத் தொடரைச் சொற்றொடரில் அமைத்தெழுதுக.
அத்தி பூத்தாற் போல.

20. கீழ்காணும் உரைப்பகுதிக்குப் பொருத்தமான நிறுத்தற் குறியிட்டெழுதுக.
தொலைக்காட்சி குளிரூட்டும் கருவி செல்பேசி கணினி முதலியவற்றைப் பழுது பார்க்கும் படிப்புகளும் உள்ளன.

## பிரிவு - II

(மதிப்பெண்கள் : 10)

**கீழ்க்காணும் வினாக்களுள் எவையேனும் ஐந்தனுக்கு விடையளிக்க.** 5x2=10

21. வாழ்வான் - பகுபத உறுப்பிலக்கணம் தருக.

22. ஔகாரக் குறுக்கத்தை எடுத்துக்காட்டுடன் விளக்குக.

23. முற்றெச்சம் என்றால் என்ன? சான்று தருக.

24. பாம்போ? கயிறோ? - எவ்வகை வினா என விளக்குக.

[ திருப்புக

25. ஆசிரியப்பா எத்தனை வகைப்படும்? அவை யாவை?

26. 'கருப்பொருள்' என்பது யாது?

27. மையீற்றுப் பண்புப் பெயர்கள் நான்கனை எழுதுக.

## பிரிவு - III

(மதிப்பெண்கள் : 50)

**குறிப்பு : பகுதி 3 - ல்** வினா எண் **35 - ல்** காதுகேளாத மாணவர்களுக்கு மட்டும் மாற்றுவினா வழங்கப்பட்டுள்ளது.

## பகுதி - 1

**கீழ்க்காணும் வினாக்களுள் எவையேனும் இரண்டனுக்கு விடையளிக்க :** 2x5=10

28. வெண்பாவின் பொதுவிலக்கணம் யாது?

29. தீயவை தீய பயத்தலால் தீயவை

தீயினும் அஞ்சப் படும் - இக்குறட்பாவில் பயின்றுள்ள அணியை விளக்குக.

**அல்லது**

பிறிது மொழிதல் அணியை சான்றுடன் விளக்குக.

30. கீழ்காணும் குறட்பாவிற்கு அலகிட்டு வாய்பாடு தருக.

பொருளென்னும் பொய்யா விளக்கம் இருளறுக்கும்

எண்ணிய தேயத்துச் சென்று.

## பகுதி - 2

**கீழ்க்காணும் வினாக்களுள் எவையேனும் இரண்டிற்கு ஒவ்வொன்றிற்கும் அரைப்பக்க அளவில் விடையளிக்க.** **2x5=10**

31. பரிதிமாற் கலைஞரின் தமிழ்ப் பற்றினை விளக்குக.

32. அகழாய்வு குறித்த செய்திகளைத் தொகுத்து எழுதுக.

33. எம்.ஜி. இராமச்சந்திரன் பற்றி கட்டுரை வரைக.

## பகுதி - 3

34. கீழ்க்காணும் பத்தியில் அமைந்துள்ள ஆங்கிலச் சொற்களைத் தமிழாக்கம் செய்க. **3+2=5**

(அ) ப்ள்ளியிலிருந்து வீட்டிற்குள் விரைந்து நுழைந்த பாரி, தன் ஸ்கூல் பேக்கைத் தூக்கிப் போட்டு விட்டு, ''மம்மி வாட்டர்'' என்று குரல் கொடுத்தான்.

''போம்மா'' என்று கூறிக் கொண்டு பேனைச் சுழலவிட்ட பாரி, டி.வி.யைப் போட்டான்.

''ஸ்கூல் விட்டு வந்தவுடனே எதற்கு டி.வி.? ஹோம்ஒர்க் செய்து விட்டு அப்புறம் பார்க்கலாம்' என்றாள், அவன் தாய்.

(ஆ) கீழுள்ள அரபு எண்களைத் தமிழெண்களாக மாற்றி எழுதுக.

13, 42, 165, 789

35. **கீழ்க்காணும் ஆங்கில உரைப்பகுதியைத் தமிழாக்கம் செய்க :** **3+2=5**

(அ) Schools do not stop with teaching the children the lessons alone. They do more. It is in the schools that the boys and girls form some regular habits. They learn to behave in an orderly way. They are corrected whenever they go wrong.

(ஆ) கீழ்க்காணும் ஆங்கிலப் பழமொழிகளில் எவையேனும் இரண்டனுக்கு இணையான தமிழ்ப் பழமொழிகளை எழுதுக :

1. Efforts never fail
2. Even a pin is good for something
3. Failure is the stepping stone to success
4. Work is worship

[ திருப்புக

35. குறிப்பு : காதுகேளாத மாணவர்களுக்குக்கான மாற்று வினா. 5x1=5

நம்முடைய நாட்டின்கண் பழைய காலத்தில் கல்வி வளர்ச்சி அடைவதற்கு முக்கியக் காரணமாக இருந்தவர்கள் புலவர்கள். அவர்களுடைய வாழ்க்கைக்குரிய சாதனங்களை வழங்கி, அவர்களுக்கு ஊக்கமளித்து வந்தவர்கள் மன்னர்களும், ஜமீன்தார்களும், பிரபுக்களும் ஆவார்கள். இந்நாட்டில் இருந்த சேர, சோழ, பாண்டியர்களும், குறுநில மன்னர்களும் தங்கள், தங்கள் ஆஸ்தானங்களிற் பல புலவர்களைக் கூட்டி ஆதரித்து, அப்புலவர்களால் தமிழ் நூற்பெருக்கமும் தம் புகழ் வளர்ச்சியும் உண்டாகச் செய்தனர். புலவராற் புகழப் பெறுதலையே சிறந்த மதிப்பாகக் கருதினர். புலவராற் பாடப் பெறாவிடின் அது வாழ்க்கைப் பயனை இழந்தது போலாகும் என்றே அவர்கள் எண்ணினர்.

1. கல்வி வளர்ச்சி அடைவதற்கு முக்கியக் காரணமாக இருந்தவர்கள் யார்?
2. புலவர்களுக்கு ஊக்கமளித்தவர்கள் யாவர்?
3. முப்பெரும் வேந்தர்கள் யாவர்?
4. புலவர்களால் வளர்ச்சி அடைந்தவை எவை?
5. மன்னர்கள் எதை சிறந்த மதிப்பாகக் கருதினர்?

## பகுதி - 4

36. கீழ்க்காணும் வினாக்களுள் ஒன்றனுக்கு விடையளிக்க. 1x5=5

(அ) கீழே கொடுக்கப்பட்டுள்ள கதையை நிறைவு செய்து பொருத்தமான தலைப்பைத் தருக.

வயதான தந்தைக்கு நான்கு மகன்கள் இருந்தார்கள். அவர்கள் எப்போதும் ஒற்றுமையின்றிச் சண்டையிட்டுக் கொண்டே இருந்தார்கள். அதனால் மனம் வருந்திய தந்தை அவர்களை எப்படியாவது திருத்த வேண்டும் என எண்ணினார். ஒரு நாள் .........

அல்லது

(ஆ) கீழ்க்காணும் தலைப்பில் எட்டு வரிகளுக்குக் குறையாமல் கவிதை ஒன்று எழுதுக.

முயற்சி அல்லது குழந்தை

## பகுதி - 5

37. கீழ்க்காணும் பாடலின் திரண்ட கருத்தை எழுதி, அப்பாடலில் அமைந்துள்ள ஏற்புடைய நயங்களில் ஏதேனும் ஐந்தினை எடுத்தெழுதுக : 1x5=5

மனிதரெலாம் அன்புநெறி காண்பதற்கும்
மனோபாவம் வானைப்போல விரிவடைந்து
தனிமனிதத் தத்துவமாம் இருளைப் போக்கிச்
சகமக்கள் ஒன்றென்ப துணர் வதற்கும்
இனிதினிதாய் எழுந்த உயர் எண்ணமெல்லாம்
இலகுவது புலவர்தரு சுவடிச் சாலை
புனிதமுற்று மக்கள் புதுவாழ்வு வேண்டில்
புத்தகசா லை வேண்டும் நாட்டில் யாண்டும்

- பாரதிதாசன்.

## பகுதி - 6

38. கொடுக்கப்பட்டுள்ள இரயில்வே முன்பதிவு / ரத்து செய்யும் படிவத்தை நிரப்புக. பெயர் நிரப்பும் இடத்தில் உமது பதிவு எண்ணை மட்டும் எழுதுக. 1x5=5

## பகுதி - 7

39. (அ) கீழ்க்காணும் வாழ்வியல் சூழலைப் படித்து விடையளிக்க : 3+2=5

பூங்குழலி எல்லாரிடமும் அன்பாகப் பழகுவாள். அவள் வீட்டிற்கு யார் வந்தாலும் அவர்களிடம் தன்மையாகப் பேசுவாள். அதனால் அவளை எல்லாருக்கும் பிடிக்கும். அவள் எப்போதும் புன்முறுவலோடு வளைய வருவாள். வீட்டிற்கு வருபவர்களை வாங்க, வாங்க உட்காருங்க, அம்மா வந்திடுவாங்க என்று வரவேற்பாள். அவளைப் ‘புன்னகைப் பூங்குழலி’ என்று தான் எல்லாரும் அழைப்பார்கள். அவர்கள் அவளை அழைப்பது சரிதானே, நீங்களே சொல்லுங்கள்.

1. பூங்குழலியின் பண்பை நீ ஏற்றுக் கொள்கின்றாயா?
2. உங்கள் வீட்டிற்கு யாராவது வந்தால், நீ எவ்வாறு வரவேற்பாய்?
3. பூங்குழலியைப் போல நீயும் எல்லாரிடமும் நன்கு பழகுகின்றாயா ?

[ திருப்புக

(ஆ) கீழ்க்காணும் சூழலைப் படித்து விடையளிக்க :

விழி மாற்றுத் திறனாளி ஒருவர் சாலையைக் கடப்பதற்காக நெடுநேரமாகக் காத்துக் கொண்டு இருக்கிறார். அந்த வழியாகப் பலரும் கடந்து செல்கின்றனர். ஆனால், அவருக்கு உதவ ஒருவரும் முன்வரவில்லை.

1. இதுபோன்றதொரு சூழலில் நீ எவ்வாறு செயல்படுவாய்?
2. பிறருக்கு உதவுவதால் வெளிப்படும் பண்பு யாது?

## பிரிவு - IV

(மதிப்பெண்கள் : 20)

### பகுதி - 1

40. கீழ்க்காணும் வினாக்களுள் **ஒன்றனுக்கு** விடையளிக்க : **1x10=10**

(அ) நும் ஊரில் பேருந்து வசதி வேண்டி போக்குவரத்துக் கழக மேலாண்மை இயக்குநருக்கு விண்ணப்பம் வரைக.

அல்லது

(ஆ) சுற்றுலா செல்ல அனுமதி வேண்டி தந்தைக்குக் கடிதம் எழுதுக.

### பகுதி - 2

41. கீழுள்ள வினாக்களுள் ஏதேனும் ஒன்றனுக்குக் குறிப்புகளைக் கொண்டு ஒரு பக்க அளவில் கட்டுரை எழுதுக. தலைப்பு ஒன்று தருக. **1x10=10**

(அ) மழை நீர் சேகரிப்பு - நீரின்றி இயங்காது உலகம் - நீர்ப் பற்றாக்குறை ஏற்படக் காரணம் - மழை நீரைச் சேமித்தல் - மழை நீரின் பயன்கள் - சேமிக்கும் வழி முறைகள் - மரம் வளர்ப்போம் - மழை பெறுவோம்.

அல்லது

(ஆ) பெண் கல்வி - பெண்ணுரிமை - சமுதாயத்தில் பெண்கள் நிலை - பெண்களுக்கு சொத்துரிமை - பெண் விடுதலை - மணக்கொடை - பெண் கல்வியால் ஏற்பட்ட சமுதாய மாற்றங்கள்.

-o0o-